# உருளைக்கிழங்கு விலை நிலையாக இருக்கும்

இந்தியாவில் உருளைக்கிழங்கு ஆண்டு தோறும், 21.34 லட்சம் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு, 437.70 லட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் உருளைக்கிழங்கில் 90 சதவிகிதம் உத்திர பிரதேசம், மேற்கு வங்காளம், பீகார், குஜராத், மத்திய பிரதேசம், பஞ்சாப், அசாம் மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்களிலிருந்து கிடைக்கிறது.

தமிழ்நாட்டில், 2014-15 ஆம் ஆண்டு, 6000 எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு, 1.3 லட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இவை முக்கியமாக நீலகிரி மாவட்டத்தில் பயிரிடப்படுகிறது. இந்த வருடம் குறைவான மழையின் காரணமாக பரப்பளவு மற்றும் உற்பத்தி குறைந்துள்ளது. எனவே மற்ற மாநிலங்களிலிருந்து வரும் வரத்து டிசம்பர் மாதங்களில் அதிகரிக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

வர்த்தக மூலங்களின் படி, தமிழ்நாட்டின் திம்பம் பகுதியிலிருந்தும், கர்நாடகாவிலுள்ள ஹாசன் மாவட்டத்திலிருந்து வரும் வரத்து நவம்பர், 2016 வரை வரும். ஆனால் கோலார், ஆக்ரா மற்றும் குஜராத்திலிருந்து வரும் வரத்து டிசம்பர் மாதம் வரை தொடரும். மற்ற மாநிலங்களிலிருந்து வரும் வரத்து அதிகமென்றாலும் ஊட்டி உருளைக்கிழங்கை விட மற்ற மாநிலங்களின் உருளைக்கிழங்கு வாழ்நாள் மிகவும் குறைவாகவே உள்ளது. மேலும் நாட்டின் தேவை மற்றும் உற்பத்தியிலுள்ள ஏற்றத்தாழ்வுகளை நிர்வகிக்க மத்திய அரசு, உருளைக்கிழங்கு இறக்குமதிக்கான வரியை 30 சதவிகிதத்திலிருந்து 10 சதவிகிதமாக குறைத்துள்ளது. எனவே, வரும் காலங்களில் உருளைக்கிழங்கின் விலை நிலையாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

இச்சூழலில், விவசாயிகள் விற்பனை முடிவுகளை எடுக்க ஏதுவாக கடந்த 19 ஆண்டுகளாக நீலகிரி கூட்டுறவு விற்பனை சங்கத்தில் (NCMS) நிலவிய உருளைக்கிழங்கு விலையை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தின் கீழ் இயங்கி வரும் விலை முன்னறிவிப்பு திட்டம், ஆய்வு செய்து சந்தை ஆய்வுகளை மேற்கொண்டது. ஆய்வு முடிவின் அடிப்படையில், அறுவடையின் போது தரமான உருளைக்கிழங்கின் பண்ணை விலை கிலோவிற்கு

ரூ. 25-27 வரை இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. எனவே விவசாயிகள் மேற்கண்ட விலை முன்னறிவிப்பின்படி, விற்பனை முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகிறார்கள்.


**மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்

வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

கோயமுத்தூர் - 641003

தொலைபேசி – 0422-2431405

**தொழில்நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

பேராசிரியர் மற்றும் தலைவர்

தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம்

விஜயநகரம்

உதகமண்டலம் - 643 001

தொலைபேசி - 0423- 2442170